**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC-3-2012**

**Prosecution witness : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கண்ணன்** | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Complainant absent PFA, A2 present, A3,4 Dispensed)**
**24.04.2023**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை தெற்கு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அதிகார கடிதத்துடன் ஆஜராகி இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். ந.க. எண். 326-இ-1-2010 என்ற மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) அவர்களின் நடவடிக்கைகள் குறித்த உத்தரவினை நான் கொண்டுவந்துள்ளேன். 19.11.2010 அலுவலக குறிப்பு எழுதப்பட்டு கையெழுத்து ஆனது 14.12.2010 அன்று இடப்பட்டுள்ளது. அன்றைய தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவில் தலைவராக திரு. ராமசாமி அவர்களும், செய லாளராக திருமதி. மெர்சி அன்னபூரணி அவர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நீதிமன்றத்தில் மேற்படி மாவட்ட பதிவாளரின் உத்தரவுக்கு தடைப்பிறப்பிக்கபடும் வரையோ அல்லது நீதிமன்ற தீர்ப்பு பெறும்வரையிலோ மாவட்ட பதிவாளரின் உத்தரவு ஊர்ஜிதத்தில் இருக்கும். அவ்வாறு நீதிமன்ற தீர்ப்பு அல்லது தடை இல்லாதவரை மாவட்ட பதிவாளரின் உத்தரவை செயல்பட்டு வரவேண்டும் என்பது சங்கத்தின் விதியாகும். மாவட்ட பதிவாளரின் உத்தரவை நீதிமன்றத்தின் மறு தீர்ப்பு இல்லாமல் எவர் மீறிகிறாரோ அது சட்டப்படி தவறாகும் என்றால் சரிதான். ந.க. எண். 326-இ-1-2010 என்ற மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) அவர்களின் நடவடிக்கைகள் குறித்த உத்தரவு உண்மை நகல் ம.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.